தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**11 வயதுப்பிரிவு**
(01.01.2014 – 31.12.2014 வரையில் பிறந்தோர்)

## கடற்புலிகள்

தமிழீழத்தின் பெரும்பகுதி கடலால் சூழப்பெற்றது. அதனால், அது எமது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். இதனை நன்கு உணர்ந்த தலைவர் மாமா 1984ஆம் ஆண்டில் தமிழீழக் கடற்படையை ‘கடற்புறா’ என்ற பெயரோடு தொடக்கிவைத்தார். அதன் பொறுப்பாளராக கேணல் சங்கர் அவர்கள் விளங்கினார்.

1991ஆம் ஆண்டு ‘விடுதலைப்புலிகளின் கடற்புலிகள்’ எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு, அதன் சிறப்புத்தளபதியாக பிரிகேடியர் சூசை அவர்கள் நியமிக்கப்பட்டார். அதன் வளர்ச்சிப் பாதையில் கடற்புலிகள் மகளிர் படையணியும் உருவாக்கப்பட்டது. கடற்கரும்புலிகளின் அளப்பெரிய சாதனைகளால் தமிழீழ விடுதலைப் போராட்டம் அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்பட்டது.

சிறிலங்கா அரசு எதிர்பார்க்காத மிகப்பெரும் அழிவுகளை ஏற்படுத்தி, எமது கடற்பாதுகாப்பைக் கடற்புலிகள் அணி நிலைநிறுத்தியது. தமிழீழ தேசத்துக்கான கடல்வழி வழங்கல் பணியையும் இது சிறப்பாகச் செயற்படுத்தியது. எமது மக்களின் வாழ்வாதாரமான மீன்பிடித் தொழிலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய சிறிலங்கா கடற்படையை ஓட ஓட விரட்டியது.

தமக்குத் தேவையான படகுகளை அனைத்துலகத் தரத்தில் வடிவமைத்து, உருவாக்கிய பெருமை கடற்புலிகளின் வியத்தகு வரலாற்றுப் பக்கங்கள்! வல்லரசு நாடுகளுக்குச் சவால்விடும் சக்தியாகக் கடற்புலிகள் வளர்ந்து நின்றனர்.

“கடலிலே காவியம் படைப்போம்” என்ற முழக்கத்தோடு ஆயிரமாயிரம் கடற்புலிப் போராளிகளின் வீரவரலாறுகளைத் தாங்கி ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது தமிழீழக் கடற்பரப்பு. சிந்திய குருதியும் கொடுத்த உயிர் ஈகங்களும் எமக்கான விடுதலையைப் பெற்றுத்தரும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எம்மிடம் உள்ளது. தொடர்ந்து போராடுகிறோம். தமிழீழக் கடற்பரப்பில் மீண்டும் கடற்புலிகளின் கப்பல்கள் வலம் வரும்.

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”